நாவிதன்வெளி பிரதேச சபை
அம்பாறை மாவட்டம்

1. நிதிக்கூற்றுகள்

1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 24 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 செப்தெம்பர் 29 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நாவிதன்வெளி பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

1.3.1 பெறவேண்டிய கணக்கு

2001 ஆம் ஆண்டிற்கு முன்னர் இடமாற்றம் பெற்றுச் சென்ற மற்றும் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களின் கடன் நிலுவை ரூபா 42,669 தொகையை மீளாய்வாண்டின் இறுதிவரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது.

1.3.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

1988ம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகளின் அத்தியாயம் I இன் பிரிவு 5(XII) இன் பிரகாரம் பணம், களஞ்சியப்பொருட்கள் மற்றும் காசோலைகளில் கையொப்பம் இடல் என்பவை நிர்வாக ரீதியாக ஒப்படைக்கப்பட்டிருந்த மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து பாதுகாப்பு பிணை பெறப்பட்டிருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2016 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திற்கு மிகையான வருமானம் ரூபா 4,623,162 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திற்கு மிகையான வருமானம் ரூபா 1,870,870 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 2,752,292 முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 வருமான சேகரிப்பு செயலாற்றல்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 2,469,982 தொகையான இறைச்சிக் கடைக் குத்தகை நிலுவையானது 05 ஆண்டுகளிற்குமேல் பழமைவாய்ந்ததாக காணப்பட்ட போதிலும் அவை 2017 யூலை 12 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

2.2.2 வீதவரிகள் மற்றும் வரிகள்

---------------------------------------------

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134 ஆம் பிரிவுக்கு அமைய, பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசங்களிலுள்ள 324 வர்த்தக நிலையங்கள் மற்றும் 6,049 வீடுகள் மீது 2003 ஆம் ஆண்டு தொடக்கம் வீதவரிகள் கணிப்பீடு செய்யப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையினால் வருடாந்தம் அண்ணளவாக ரூபா 3,186,500 தொகையான வருமானம் இழக்கப்படுகின்றது.

3. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------

3.1 முகாமைத்துவ பலவீனம்

-------------------------------------------

மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி மானியத்தின் (PSDG) கீழ் ரூபா 990,016 பெறுமதியில் 2016 ஆம் ஆண்டில் மக்கள் நடமாற்றமற்ற பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட திறந்தவெளிச் சந்தை 2017 யூலை 12 ஆம் திகதி வரை பாவனையற்று காணப்படுகின்றது.

3.2 ஒப்பந்த நிர்வாகம்

--------------------------------

மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 498,117 செலவில் மத்திய முகாம் விளையாட்டு மைதானம் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட போதிலும் அம் மைதானத்திற்கு மதிப்பீட்டின் படி முதலாம் தரத்திலான கிறவலுக்குப் பதிலாக தரம் குறைந்த கிறவல் இடப்பட்டுள்ளதனால் ஒப்பந்தக்காரருக்கு ரூபா 34,414 மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ளதுடன் விளையாட்டு மைதானத்தை பாவிக்கமுடியாத நிலையில் சிறுகற்கள் நிரம்பிக் காணப்படுகின்றன.

3.3 திண்மக் கழிவகற்றல் நிலையம்

---------------------------------------------------

திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பொதுமக்களுக்கு விநியோகிப்பதற்காக ரூபா 14,985 தொகைக்கு 2,000 துண்டுப்பிரசுரங்கள் மீளாய்வாண்டில் அச்சிடப்பட்ட போதிலும், 2017 யூலை 12 வரை அவற்றில் 1,200 துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்படாது வைத்திருக்கப்பட்டன.

4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

----------------------------------------------------------------

4.1 தீர்த்து வைக்கப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்

--------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(அ) அப்போதைய வடகிழக்கு மாகாண சபையால் சம்பளக் கொடுப்பனவு நோக்கத்திற்காக 2006 திசெம்பர் 18 ஆம் திகதி வழங்கப்பட்ட ரூபா 71,600 பெறுமதியான காசோலை வங்கியில் வைப்புச் செய்யப்பட்டு தேறப்படாதிருந்தும் இன்று வரை உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 ஆம் ஆண்டில் ரூபா 3 மில்லியன் கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட திண்மக் கழிவகற்றல் நிலையம் கோயிலுக்கு அருகாமையில் அமைக்கப்பட்டமையால் பொதுமக்களின் எதிர்ப்புக் காரணமாக 2017 யூலை 12 ஆம் திகதிவரை செயற்படாது விளைவற்றுக் காணப்பட்டிருந்ததுடன் அதிலுள்ள பொருட்கள் களவாடப்பட்டிருந்தன.

5. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------------------------------

பின்வரும் ஒவ்வொரு கட்டுப்பாடுகளிற்கு எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் மீது விசேட கவனம் செலுத்த வேண்டும்.

| கட்டுப்பாடுகள் | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | i. நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படுதல்.<br>ii. பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்படும் சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல். |
| (ஆ) ஒப்பந்த முகாமைத்துவம் | பெறுகை நடைமுறை பின்பற்றி ஒப்பந்தம் வழங்குதல். |
| (இ) வருமான அறவீட்டு முகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்படல். |